குருடர்கள் ஆகியோர்களுக்கு இலவசமாக பஸ்களில் பிரயாணம் செய்ய தனி பாசே அரசு வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்த வசதி சிகிச்சை காலத்தில் மட்டும் அளிக்கிற நிலை இருப்பதால் அதுபோன்று சான்றிதழ்கள் தேவைப்படுகின்றன.

சில பேருந்துகளில் இரண்டு நடத்துநர்கள்

*** 391 வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் அதிக நெரிசல் உள்ள சில ரூட்களில் ஓடும் பேருந்துகளில், இரண்டு கண்டக்டர்கள் நியமிக்கப்பட்டிருக் கிறார்களா ?

(இ) ஆம் எனில், இம்முறையை மேலும் பல பஸ் ரூட்களுக்கு விரிவு படுத்த அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) சோதனை நடவடிக்கையாக, 4-ஆம் எண் பேருந்து வழித்தடத்தில் செல்லும் (மந்தவெளி-தண்டையார்பேட்டை) ஒவ்வொரு பேருந் திலும் நெரிசல் மிகுந்த நேரங்களில் 25—6—1971-ஆம் நாளிலிருந்து, இரண்டு நடத்துநர்கள் நியமிக்கப்பட்டனர். இது பலனளிக்கத் தக்க வகையில் இல்லாததால், 4—11—1971-ஆம் நாளிலிருந்து இச் சோதனை நடவடிக்கை நிறுத்தப்பட்டது.

(இ) இனிமேல், பேருந்து ஒன்றில், இரண்டு நடத்துநர்களை நியமிக்கும் உத்தேசமில்லை.

திரு. என் கிட்டப்பா : மகளிர்களுக்கு மட்டும் என்று ஓடுகிற பஸ்களில் பெண் கண்டெக்டர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அப்படி ஒன்றும் யோசனை இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : இதேமாதிரி இன்னமும் 2 கண்டெக்டர்கள் டி.வி.எஸ். பஸ்ஸில் இருந்து வருகிறார்கள். ஆனால் இங்கே 25—6—1971-இல் ஆரம்பிக்கப்பட்டு பலன் அளிக்க வில்லை என்ற காரணத்தினால் கைவிடப்பட்டதாகச் சொல்கிறாரே, மீண்டும் ஒரு முறை பரிசீலித்து பஸ்கள் வேகமாகப் போவதற்காக 4-ஆம் நம்பர் பஸ்களிலாவது இரண்டு கண்டெக்டர்களை நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இரண்டு கண்டெக்டர் களைப் போட்டால் பஸ் வேகமாகப் போகக்கூடும், டிக்கெட்டு கொடுக்க வசதியாக இருக்கும் என்று கருதித்தான் போடப் பட்டது. ஆனால் அவர்களுக்குள் எதுவரை தாங்கள் டிக்கெட்

1971 டிசம்பர் 14]

கொடுப்பது என்கிற பிரச்சினையும், அவர் கொடுத்திருப்பார் என்று இவர் கொடுக்காமலும், இவர் கொடுத்திருப்பார் என்று அவர் கொடுக்காமலும் இருக்கிற நிலையும் காணப்பட்டது. இதனால் பஸ் வேகமாகப் போவதற்கு அனுகூலம் ஏற்படவில்லை. ஆகவே அங்கங்கே பஸ் ஸ்டாப்புகளில் ஸ்டாண்டிங் கண்டெக்டர்களைப் போட்டு டிக்கெட் கொடுத்துவிடுவதனால் பஸ் வேகமாகப் போவதற்கு அனுகூலமாக இருக்கிறது என்பதைக் கண்ட பின்னர்தான் 2 கண்டெக்டர்கள் தேவையில்லை என்ற முடிவு செய்யப்பட்டது. இதனால் அதிகச் செலவு ஆவதும் தவிர்க்கப்படும்.

திரு. எஸ் முருகையன் : தலைவர் அவர்களே, நெரிசல் மிகுந்த நேரங்களில் சென்னை மாநகரத்தில் 50 இடங்களில் பஸ்கள் கட்டாயமாக நிறுத்தப்படும் என்று பத்திரிகைகளில் செய்தி வந்ததே, அந்தத் திட்டத்தின் விவரங்கள் என்ன? முற்பகல் 10-30.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நெரிசல் மிகுந்த நேரங்களில் கூட்டம் அதிகமாக இருப்பதனாலும், அடிக்கடி பஸ்கள் ஸ்டாப்புகளில் நிற்பதில்லையென்கிற புகார் வந்ததாலும், சென்னை நகரில் போக்குவரத்து நெரிசல் மிகுந்தவை என்று 50 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த ஐம்பது இடங்களிலும் பஸ்கள் கட்டாயமாக நின்று போக வழி செய்யப்பட்டது. பயணிகள் ஏறினாலும் ஏறாவிட்டாலும், இறங்கினாலும் இறங்காவிட்டாலும் பஸ்கள் அந்த இடங்களில் கட்டாயமாக நிற்க வேண்டும் என்று திட்டமிட்டு, அது 1—12—1971 முதல் அமலாகியிருக்கிறது. மேலும், பயணிகள் வரிசையாக நின்று பேருந்துகளில் ஏறுவதற்காக விசேஷ 'க்யூ' ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பயணிகள் நல்ல ஒத்துழைப்புத் தருகிறார்கள். போக்குவரத்துத் துறையில் இருக்கிற தொழிலாளர்களும் பஸ்களை நிறுத்தி நல்ல முறையில் ஒத்துழைப்புத் தருகிறார்கள். ஏற்கனவே 3 மணி நேரம் நெரிசலைத் தவிர்க்க தேவை ஏற்பட்டது என்கிற நிலைமையை மாற்றி, ஒரு மணி நேரத்தில் நெரிசலைத் தவிர்க்க முடிகிறது. இந்தக் கட்டுப்பாட்டைக் கொண்டு வந்ததன் மூலம் நெரிசல் ஒரு மணி நேரத்தில் தவிர்க்கப்படுகின்றது.

கோபுரம், விமானம் கட்டும் பணிகளுக்குப் பயிற்சி

* 392 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவில் கோபுரத் திருப்பணிக்கான 'சுதைவேலை' பயிற்சியளிக்கும் பள்ளி ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இல்லை.